போர் 1 பொள்ளாச்சி. 27—9—51. விலை அரையணா. 6-பக்கம். வெற்றி 33.

சட்டசபைக்கு யார் வேண்டும்?

பணமா? குணமா?

கோவை காங்கிரஸ் மாளிகையில் தேர்தல் போர்டார் ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும்வந்துள்ள அபேக்ஷகர்கள், காங்கிரஸ் ஊழியர்கள், கமிட்டியார்கள் முதலியோரை பேட்டி கண்டு விசாரித்தனர். ஊழியர்களுக்கு சாதகமான சூழ்நிலையில் போர்டார் இருப்பதாகத் தெரியவில்லை. பணமூட்டைகள்தான் எங்கு நோக்கினும் காட்சி அளிக்கின்றனர்: காங்கிரஸின் பரம்பரா தர்மத்தை முற்றவைத்து முருக்கேற்றும் தியாகிகட்கு இடம் கொடுக்க யாரும் முன்வந்ததாகத் தெரியவில்லை. ஜில்லா பூராவிலும் ஒன்றிரண்டு ஊழியர்களுக்காவது இடம்கொடுப்பார்களா என்பதைப்பொறுத்திருந்து பார்ப்போம்.

பவானி பீ. ஏ ராஜகோபால், மேட்டுப்பாளையம் அஸாத், கோவை சாமுவேல், ஆர். குப்புசாமி போன்ற ஜில்லாவின் தலைசிறந்த ஊழியர்களை விட்டுவிடுவார்களேயானால், காங்கிரஸ் பணமூட்டைகளிடம் போய்விட்டது என்பதில் யாருக்குமே சந்தேகமே வேண்டியதில்லை. காங்கிரஸ் ஏழைகளின் ஸ்தாபனம, பாட்டாளி மக்களின் ஸ்தாபனம், காங்கிரஸ் நாட்டுமக்களுக்கு நிச்சயம் பொருளாதார விடுதலை கொடுக்கும் என்பதுஉண்மையானல் அதற்கு அறிகுறியாக மேலே சொன்ன ஊழியர்களைக் கட்டாயம் சட்டசபைக்கு அனுப்பியாகவேண்டும். ; அப்போதுதான் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும். இதைத்தேர்தல் போர்டார் கட்டாயம் கவனிக்கவேண்டும் பெரிய தொழிற் சாலைகளையும், போக்குவரத்துசாதனங்களையும் சர்க்கார் தேசிய மயமாக்கவேண்டிய இக்காலத்தில் பணக்காரர்களை சட்டசபைக்கு அனுப்புவது எவ்வளவு ஆபத்து என்பதையும், அவர்கள் காங்கிரஸின் கொள்கைகளை நிறைவேற்றுவார்களா என்பதையும் தேர்தல் போர்டார் கவனிக்கவேண்டும்.

நிற்க! பொள்ளாச்சித் தாலூக்காவை சேர்ந்தவர்களை தலைவர் ஸ்ரீ காமராஜ் அழைத்தபோது ஏராளமான கூட்டம் உள்ளேவந்து சேர்ந்தது. நிற்கவும் இடமில்லை பலர் வெளியிலேயே நின்றுகொண்டிருந்தனர். சுமார் ஆயிரம்பேர்கள் இருக்கலாம் சட்டசபைக்கு யார் வேண்டும்? என்று தலைவர் கேட்டபோது காந்தி ராமசாமி எழுந்து நின்று ஸ்ரீ வி. கே பழனிச்சாமி கவுண்டரைத்தான் அனுப்பவேண்டுமென்றும், அவரால் மக்களுக்கு பல நன்மைகள் உண்டென்றும் கூறினர். இவரை ஆதரித்து மலையாண்டிபட்டணம் திருமலைசாமி கூறினர். தலைவர் பலரிடம் அபிப்பிராயம்கேட்டபோதுஏராளமான பேர்கள் ஸ்ரீ வி. கே. பி. தான் வேண்டும்என்றனர். சிலர் ஸ்ரீ மகாலிங்கம் வேண்டுமென்றும் கூறினர். கூட்டம் கட்டுக்கடங்கவில்லை. பிறகு எல்லோரையும் வெளியில் அனுப்பினர் பிறகு மகாலிங்கத்தின் சார்பில் ஸ்ரீமான்கள் பி. ஆர். கந்தசாமிக்கவுண்டர் ஒ எஸ். பழனிசாமிக்கவுண்டர், பி. கே. சேதுராமசாமிக்கவுண்டா, உடுமலைதாலூக்கா சுப்பேகவுண்டர் ஆகிய நால்வரும், ஸ்ரீ வி கே. பழனிச்சாமிக் கவுண்டரின் சார்பில் ஸ்ரீமான்கள் குட்லிமுத்துக் கவுண்டர், நல்லமுத்துக்கவுண்டர், நடராஜ உஸ்மான் ஆகியநால்வரும் தேர்தல்போர்டாரிடம் அபிப்பிராயம் கூறினர்: தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியினர், டவுன் காங்கிரஸ் கமிட்டியினர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிமெம்பர்கள், தலைவர், காரியதரிசிகள் முதலியோரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். தாலூக்கா கமிட்டியினரில்பெரும்பாலோர் ஸ்ரீ வி கே பி. யை ஆதரித்ததாகவும், ஜில்லா கமிட்டி மெம்பர்களிலும் பெரும்பகுதியினர் ஸ்ரீ வி. கே. பி. யை ஆதரித்ததாகவும்தெரிகிறது டவுன் காங்கிரஸ் கமிட்டியினரில் பெரும்பகுதி இரண்டுபேரும் வேண்டும் என்று கூறிய தாகத்தெரிகிறது.

மற்றும் பலர் தலைவர்களிடம் அபிப்பிராயம் தெரிவித்தனர். மொத்தத்தில் ஸ்ரீ வி. கே. பி.க்கு தாலூக்காவின் பல பாகங்களிலும் நல்ல ஆதரவு இருக்கிறது. இரண்டு தொகுதிக்கும் இரண்டு பேரையும் போடுவது தான் சிறந்தது என்று பலர் கருதுகின்றனர்.

காந்தீய ஊழியர்சங்கம்.

காந்தீய ஊழியர் சங்கத்தின் கூட்டம் ஸ்ரீ எம். ஆறுமுகமுதலியார் தலைமையில் 19—9—51 ல் நடைபெற்றது. சட்டசபைக்கு யார் வேண்டும் என்பது பற்றி ஸ்ரீமான்கள் டி. ராமலிங்கம் பிள்ளை, பி எஸ். ஷண்முகரெட்டியார், பி. ஆர். வாசுதேவன், ஆறுமுகம், முத்துசாமி கவுண்டர், பி. டி. சென்னப்பகவுடர், வி: வேலுசாமி, பி. எஸ். வேலுசாமி மற்றும் சிலர் பேசிய பின்னர் மெம்பர்கள் தங்கள் இஷ்டம்போல் அபிப்பிராயம் தெரிவித்துக் கொள்ள முடிவுசெய்யப்பட்டது.

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 27—9—51. வியாழன்.

நமது யோசனை நடக்குமா!

சென்றவாரம் பொள்ளாச்சித் தாலூக்காவிலுள்ள இரண்டு-தொகுதிக்கும் ஸ்ரீ வி. கே. பழனிசாமிக்கவுண்டரையும், ஸ்ரீ மகாலிங்கத்தையும் நிறுத்தும்படி தேர்தல்போர்டாருக்கு யோசனை கூறினோம். கோவையில் தேர்தல்போர்டாரிடம் பலர் நமது யோசனையை அனுசரித்துத்தான் சொன்னார்கள். ஸ்ரீ வி கே. பி.க்கு இருக்கும் அபரிமிதமான ஆதரவு கோவையில் நன்கு தெரிந்தது. ஸ்ரீ சி. சுப்ரமணியம் வேண்டுமென்று ஒருவராவது தேர்தல் போர்டாரிடம் சொன்னதாக நமக்குத்தெரியவில்லை. பலர் அவர்கூடாது என்பதையும் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் தேர்தல் போர்டார் பொள்ளாச்சித்தாலூக்காவின் நிலைமையை நன்கு புரிந்துகொண்டிருப்பார்கள் என்றேநாம் நம்புகிறோம். தொகுதியிலுள்ள காங்கிரஸ்காரர்கள், பொதுமக்கள் ஆதரவுசிறிதுமின்றி மேலிடத்தின் ஆதரவைமட்டும் வைத்துக்கொண்டு ஒருவர் தேர்தலுக்கு நின்றால் அவர்களுக்கு வேலைசெய்பவர்கள் யார்? ஓட்டுப்போடுவது யார்? இங்குள்ள நிலைமையை ஸ்ரீ சி. சுப்ரமணியம் நன்கு உணர்ந்துகொண்டு ஒரு சமரசமானமுடிவுக்கு ஏற்பாடு செய்வதுதான் நேர்மையான காரியம். காங்கிரஸின் பெயரால் அறிவித்துவிட்டால் கட்டுப்பாட்டிற்காக எல்லோரும்வேலைசெய்வார்கள், காங்கிரஸிற்காக மக்கள் ஓட்டுப்போடுவார்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பது தவறு. அந்தக்காலம் மலையேறி விட்டது. காங்கிரஸ் அபேக்ஷகர்கள் என்றாலும் மக்கள் விரும்பாதவர்களுக்கு நிச்சயம் தோல்விதான் இந்தத்தடவை என்பதை நன்கு உணரவேண்டுகிறோம். தாலூக்காவின் நலனை உத்தேசித்து காங்கிரஸின் நலனை உத்தேசித்து இந்ததாலூக்கா இரண்டு தொகுதிக்கும் ஸ்ரீ வி. கே. பி. கவுண்டரையும், மகாலிங்கத்தையும் நிறுத்துவதுதான் புத்திசாலித்தனமான காரியம். இதைக்கட்டாயம் தேர்தல் போர்டார் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

குருவி ஜோசியம்.

இந்த வாரம் குருவி கோவைக்குப்பறந்தது. கோவையில் காங்கிரஸ் பிரமுகரைப்பேட்டிகண்டது. மேலும் ஸ்ரீ சி. பி. சுப்பையா, தலைவர் ஸ்ரீ காமராஜ், மந்திரிகள் முதலியோரையும் பேட்டி கண்டது. தேர்தல் போர்டாரிடம் ஏராளமான பேர்கள் வந்து ஸ்ரீ வி கே. பி. தான் வேண்டும். மகாலிங்கம் வேண்டும் என்று அவரவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். சுமார் இருதரப்பிலும் ஆயிரம் பேர்கள் இருக்கலாம். ஆனால் கோவைப் பிரமுகரை ஆதரித்து ஒருவராவது சொன்னதாகத்தெரியவில்லை. ஆதரிக்காவிட்டாலும் பரவாயில்லை. பலர்இவர் எங்களுக்கு வேண்டாமென்றனர். கிணத்துக்கடவில் அந்தத் தொகுதியைச்சேர்ந்தவர்கள் நடத்தியகூட்டத்தில் பிர்க்காவுக்கு ஒரு கன்வீனர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தக் கன்வீனர்கள் தேர்தல் போர்டாரைப்பேட்டி கண்டனர். இவர்கள் கோவைப் பிரமுகர் எங்கள் தொகுதிக்கே வேண்டாமென்று தெரிவித்துக்கொண்டதாக நமது குருவி ஜோசியம் சொல்லுகிறது.

பொள்ளாச்சியிலிருந்து மதுரைக்கு ஒரு சமரசக்கமிட்டியார்-தேர்தல் போர்டாரைப்பார்க்கச்சென்று ஸ்ரீ சி. பி. சுப்பையாவையும் கோவை பிரமுகரையும் பார்த்து பிரமுகர் கிணத்துக்கடவுத்தொகுதிக்கு வேண்டாம் ஸ்ரீ வி கே. பி. யையும், மகாலிங்கத்தையும் இரண்டு பேரையும் இரண்டு தொகுதிக்கு போட்டுவிடும்படியும், தாலூக்காவின் காங்கிரஸின் கௌரவத்தையும் நிலைநாட்டும்படியும்கேட்டுக்கொண்டதாகவும், கோவை பிரமுகர் ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை என்றும் அதற்கு பதிலாக வருத்தப்பட்டுக்கொண்டதாகவும் நமக்கு குருவி ஜோசியம் சொல்லுகிறது.

கோவை பிரமுகர் நமது குருவிமீது சலித்துக்கொண்ட சங்கதி அடுத்தவாரம் குருவி ஜோசியம் சொல்லும். பொள்ளாச்சித்தாலூக்காவிற்கு மேலே சொன்ன இரண்டுபேரையும் போட்டு கோவை பிரமுகரை வேறு எங்கேயாவது தொகுதியில் நிறுத்துவதில் நியாயம். உள்ள நிலைமையும்கூட கிணத்துக்கடவில் நிறுத்தினால் அவர் தோற்பதமட்டுமல்ல அந்த அதிருப்தி டவுன் சீட்டும் கோவிந்தா ஆகிவிடும் காங்கிரஸிற்கு என்று இன்றே நமது குருவி ஜோசியம் சொல்லுகிறது.

தாலூக்காவில் ஸ்ரீ வி. கே: பி. க்கு என்ன எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை கோவையில் நேரில் பார்த்தும் பலர் நிலைமையை புரிந்தும் புரியாதது போல் வேஷம் போட்டால் இது காங்கிரஸின் தோல்வியில்தான் முடியும் என்று குருவி ஜோசியம் கூறுகிறது.

குருவியை சிலர் குறைகூறி வருவது பற்றி ஜோசியம் அடுத்தவாரம சொல்லும்

ஏன் கூடாது?

ஐயா வாசியாரே சென்ற வாரத்திய தலையங்கத்தில் சட்டசபைக்கு டவுன் தொகுதிக்கு ஸ்ரீ வி. கே. பழனிசாமிக் கவுண்டரையும் கிணத்துக்கடவு தொகுதிக்கு ஸ்ரீ என்: மகாலிங்கத்தையும் சிபார்சு செய்தீர்களே டவுன் தொகுதிக்கு மகாலிங்கம் ஏன் கூடாது?

(பி. ஆர். வாசுதேவன்)

ஸ்ரீ வி. கே. பழனிசாமிக் கவுண்டருக்கு இரண்டு தொகுதியிலுமே செல்வாக்கு இருக்கிறது. அவர் எந்தத்தொகுதியில் நின்றாலும் எளிதில் வெற்றி நிச்சயம். ஆனால் மகாலிங்கத்திற்கு டவுன் தொகுதியைவிட கிணத்துக்கடவு தொகுதிதான் சௌகரியம் எளிதென்பது எமது அபிப்பிராயம். டவுன் தொகுதியில் மகாலிங்கத்திற்கு எதிர்ப்பு உண்டு. அதை 21-ம் தேதி கோவை காங்கிரஸ் மாளிகையில் பார்த்தவர்கள் உணருவார்கள்.

தேநீர் விருந்து

12-ம் தேதி புதன் வள்ளுவர் நாடக மன்றத்தில் பிச்சைக்காரி நாடகம் நடத்தியதை முன்னிட்டு ஸ்ரீ கி. கி. துரைராஜ் தலைமையில் நடிகர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் ஸ்ரீமான்கள் இரா. சுப்ரமணியம்; தி. கந்தசாமி, வ. சு, நல்லதம்பிக்கவுண்டர் ஆகியோர் தேநீர் விருந்து அளித்தபின்னர் நாடக மன்றத்தைப்பற்றி நடிகர்கள் பேசினார்கள்; பாரதியை பற்றி இரா. சுப்ரமணியம் ஒழுங்குகடமையை பற்றி தி. கந்தசாமியும் பேசினார்கள்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

எனமல் & போட்டோ போர்டுகளுக்கு
M. **முத்து,** பெயிண்டிங் ஒர்க்ஸ்;
மரப்பேட்டை வீதி.

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு
சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு
பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,
பழனி
ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, **பொள்ளாச்சி.**



கேள்வி—பதில்;

கே: ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தேர்தலில் அபேக்ஷகராக நின்றால் அவருக்கு ஓட்டுகள் கிடைக்குமா?

(பி. எஸ். வெங்கிடேஸ்)

ப: ஆ ஹா தாராளமாக அவருக்கு ஓலவக்கோடு ஓடுகள் கிடைக்கும் என்று நம்ம ஆபீஸ்பையன் கூட சொல்லுகிறான்!

கே: ஆண் முதலில் பெண்ணைக்காதலிக்கிறானா அல்லது பெண்முதலில் ஆணை காதலிக்கிறாளா?

(கோபாலன்)

ப: ஆணுக்குத் தெரியாமல் பெண்ணும், பெண்ணுக்குத் தெரியாமல் ஆணும்காதலிக்கின்றனர்!!

கே: பாகவதர் "அமரகவி" யும் மற்றுமோர் புதியபடமும் தயாரிக்கிறாராமே, அப்படத்தின் பெயர் என்ன? கதை, வசனம், பாட்டு யார் எழுதியது?

(எஸ். அழகுமதி)

ப: பாகவதர் அமரகவிக்குப்பின் "ஜீனேவா" என்றபடம் தயாரிக்கப்போகிறார் அப்படத்திற்கு கதை, வசனம், பாட்டு நமது நண்பர் சுரதா தான் எழுதியிருக்கிறார்.

கே: பொதுமேடையில் பிரசங்கம் செய்யும் தலைவர்கள், தலைவர் சொற்படி தான் மக்கள் நடக்கவேண்டும் என்றுகூறுகிறார்கள். ஆனால் என் அபிப்பிராயம் மக்களுக்காகத்தான் தலைவர் உங்கள்......?

(முத்துசாமி)

ப: மக்களின் நன்மைக்காக, மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், மக்களுக்காகத்தானே ஸார்!

கே: எனதுநண்பர் கலப்புமணம் செய்துகொள்ள விரும்புகிறார், அதே போல் நானும் கலப்புமணம் செய்துகொள்ளப் போகிறேன். உமது அபிபபிராயம் என்ன?

(கே அருணாசலம்)

ப: உமதுமணம் சமூகச்சதியிலே சிக்கிப்புரளும் புல்லுருவிகளுக்கு ஓர் அறிவிப்பு! வாலிப உலகிற்கு விழிப்பு! அதிலிருந்துவரும் களிப்பு! அனாச்சாரங்களுக்கு தடுப்பு!

கே. ஒரு இளம் எழுத்தாளர் ப[...]யில் படிக்கும் கன்னியைக் காதலிக்கிற[...] இது ஏன்?

(பி. சீனிவாசரா[...]

ப: ஒருவேளை காதல்என்பது இ[...]தென்று தெரிந்து ஒரு நவீனம் எழு[...]ணுவதற்கு இருக்கலாம்!

கே: மணமகளில் 50-ம் 60-ம் கா[...]க்கிறார்களே அதில் 50-ம் வருடத்தில்[...] வயது கிழவன் 26-வயது குமாரியை[...] மணம் செய்துகொள்வதைமட்டும் ஏ[...]த்தவில்லை?

(சி. கே. நட[...]

ப: ஒரு வேளை ஈ. வெ. ரா. கோப[...]க்கொள்வார் என்ற காரணத்திற்காக [...]தாமல் இருக்கலாம்!

கே: ஆங்கிலேயரது ஆட்சியினால் [...]தியாவிற்கு நன்மையா! தீமையா?

(க. முத்துசா[...]

ப; நன்மையைவிட தீமைதான் அ[...]

கே: நான் ஏன்பெண்ணாய் பிறந்தே[...]

(பீ. சகுந்த[...]

ப: பிறந்ததின் பயனை அனுபவிப்[...]குத்தான்!!

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.

298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள், E. S. L. C. வீக்கும், 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்பு வரை, ஹை ஸ்கூல்களிலும் சேரலாம் S. S. L. C. இண்டர் வகுப்புகள்உண்டு ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:— **S. R. Chandran.**

'லக்க ஜோசியம்'

(28-9-51 முதல் 4-10-51 வரை) கே. பி. வி

1	2	3	4	5	6	7	8	9
A	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

RAMAN

9 1 4 1 5, 2+9+1+4+1+5 22, 2+2=4 இந்த நெம்பர் 4 தான். **RAMAN** என்கிற எண்ணிற்கு வ[illegible] எண் நெம்பர் 4யை கவனித்தால் பல[illegible]கள் தெரியவரும். அதே மாதிரியாக [illegible]வ்வொருவருடைய பெயர்களையும் கணி[illegible]தியாக செய்து பலன் பார்க்கவும். அப்[illegible] உங்களுக்கு வசிய எண் தெரியாவிட்[illegible]ல் எமக்கு எழுதவும். பூரு ஆயுள் [illegible]லன் தெரியவேண்டுமானல் 14-அண[illegible]ணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் [illegible]லமாக அனுப்பினல் விபரமான பூரு [illegible]புள் பலன் கிடைக்கும்

கே. பி. வாசுதேவன்,
100, வெங்கடேஸ்வர காலனி,
(சயானி டாக்கீஸ் அருகில்)
அயனவரம், சென்னை 23.

1
வெள்ளி - பணமுடை
சனி - வீண் அலைச்சல்
[illegible]யிறு - சஞ்சலம்
[illegible]கள் - பணம் வருகை
[illegible]வ்வாய் - சந்தோஷம்
[illegible]ன் - விகித அனுகூலம்
[illegible]ாழன் - அபிவிருத்தி

2
வெள்ளி - விகித கஷ்டம்
சனி - காரிய தடை
[illegible]று - பந்து வருகை
[illegible]கள் - சன்மானம்
[illegible]வாய் - நன்மை அதிகம்
[illegible]ன் - குடும்ப சவுக்கியம்
[illegible]ாழன் - ஸ்திரி சுகம்

3
வெள்ளி - கஷ்டமதிகம்
சனி - காரியக்கேடு
[illegible]று - உபத்திரம்
[illegible]கள் - சிலவு அதிகம்
[illegible]வாய் - மனோசஞ்சலம்
[illegible]ன் - கெட்ட செய்தி
[illegible]ாழன் - மானபங்கம்

4
வெள்ளி : சுபம்
சனி : பணவரவு
ஞாயிறு : பந்துக்கள் வரவு
திங்கள் : பிரபு சந்திப்பு
செவ்வாய் ; பலவித காரிய அனுகூலம்
புதன் ; வெற்றிகரமானநாள்
வியாழன் : நன்மை

5
வெள்ளி : நண்பர் சந்திப்பு
சனி : வெற்றிகரமான நாள்
ஞாயிறு : நல்லசெய்தி
திங்கள் : பிரபு சந்திப்பு
செவ்வாய் : விகித அனுகூலம்
புதன் : பலவெற்றி
வியாழன் ; மங்களகரமான நாள்

6
வெள்ளி : பலவிதமான தடை
சனி : பணக்கஷ்டம்
ஞாயிறு : கடன் உபத்திரவம்
திங்கள் : சுபச்செய்தி
செவ்வாய் : விகித அனுகூலம்
புதன் : பந்து வரவு
வியாழன் : நற்செய்தி

7
வெள்ளி : சாதாரணநாள்
சனி , காரியதடை
ஞாயிறு ; மனக்கஷ்டம்
திங்கள் : கெட்டசெய்தி
செவ்வாய் : பந்துவருகை
புதன் : கெட்டநாள்
வியாழன் : மனசஞ்சலம்

8
வெள்ளி : மத்திபநாள்
சனி : தெய்வ பிரார்த்தனை
ஞாயிறு : சாதாரணநாள்
திங்கள் : சும்மாயிருப்பதே நலம்
செவ்வாய் : எதிலும் காரியத்தடை
புதன் : கஷ்டம்
வியாழன் : மனவியாகூலம்

9
வெள்ளி : சும்மாயிருப்பதே நலம்
சனி : காரியத்தடை
ஞாயிறு : மானவியாகூலம்
திங்கள் : பணவரவு
செவ்வாய் : சுபச்செய்தி
புதன் : ஸ்திரிசேர்க்கை
வியாழன் : பந்துவரவு

சுடச்சுட!?

○ எனக்கு இந்த சேவைசெய்வதில் ஆரம்பத்தில் இஷ்டமில்லை, ஆனல் இப்போது சேவை செய்ய ஆரம்பித்ததிலிருந்து விட்டுச் செல்ல மனமில்லை!

(முதியோர் கல்வியினர் ரோசவிக்டோரியாவுக்கு அளித்த விருந்தின்போது ஒரு பிரசங்கி)

ஆதாயமில்லாமல் செட்டியார் ஆத்தோடு போவாரா என்று வாயில் ஜிலேபியை வைத்துக்கொண்டே முனமுனத்தார் அருகில் அமர்ந்திருந்த ஆசாமி ஒருவர்!!

○ எங்கள் ஆட்சி வந்தால் முதலில் போலிஸ்காரர்கள் கையில் கத்திரிக்கோல் கொடுத்து உச்சிக்குடுமைகளையும்; பூணூல்களையும் கத்திரிக்க சட்டம்போடுவேன்!!

(பொள்ளாச்சியில் ஈ. வெ. ரா.)

நல்லவேளை எங்கள் ஆட்சிவந்தால் போலிஸார் முன்னிலையில் 70-வயது கிழவனும் 26 வயது குமரியும் கட்டாயம் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று சட்டம் போடச் சொல்லவில்லையே என்று சந்தோஷப்படுகிறார் குடுகுடு தாத்தா ஒருவர்.

○ எந்த விதமான ஏகபோக ஆதிக்கத்தையும் ஒழிப்பதும் ராஜீயசமூக, பொருளாதார ரீதியை நிலைநிறுத்துவதும், மதுவிலக்கைரத்துசெய்துவிட்டு திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்தும்.

(ஜஸ்டிஸ் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம்.)

ஒழிப்பதும். நிலைநிறுத்துவதும், ரத்துசெய்வதுமாக இருந்தால் எப்படித் திறமையான நிர்வாகம் ஏற்படுத்த முடியும் என்று ஏக்கம் கொள்கிறார் மாஜி ஜஸ்டிஸ் ஒருவர்.

○ தேர்தலுக்காக எந்த ராஜீயக்கட்சிக்கும் ரேடியோபிரசார வசதி இல்லை.

[ரேடியோ மந்திரி.]

இனி இதை ஆக்ஷேபித்து அண்ணாத்துரை கோஷ்டிகள் ரேடியோ பேச்சுரிமை மகாநாடுகள் கூட்டி நூற்றிபனேறு தீர்மானங்கள்போடலாம்.

○ ரிக்ஷா இழுப்பவர் தன் வண்டியில் ஏறியவர் மறந்துவிட்ட ரூ. 4000 நோட்டுகளை போலீஸாரிடம் ஒப்படைத்தார்.

[நாக்புரி செய்தி]

இப்போதே 60-ம் வருடம் வந்துவிட்டதே என்று ஆச்சரியப்படலாம் மணமகள் பார்த்த ரசிகர்கள்.

ரேஷனிங் அட்வைசரி கமிட்டி.

நாளது 29—9—51 சனிமாலை 5-30மணிக்கு ஷை கமிட்டிக்கூட்டம் ரேஷனிங் ஆபீஸில் நடைபெறுமென்று ஆபீஸர் ஸ்ரீ எம். நடராஜமுதலியார் தெரிவிக்கிறார்.

கனம்ரோச்விக்டோரியா.

நமது சென்னைசர்க்கார் உணவு மந்திரி கனம் ரோச்விக்டோரியா 20-ம் தேதி வியாழன் காலை நம் நகரத்திற்கு விஜயம் செய்தார். அன்னுரை பி டபுள்யூ. டி. பங்களாவில் நகர காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ எம். ராமசாமிக்கவுடரும், காங்கிரஸ் பிரமுகர், ஊழியர், அதிகாரிகள் ஆகியோர் வரவேற்றனர். கனம் மந்திரியாருக்கு நம் நகர சப்கலெக்டர் அவர்கள் காலை சிற்றுண்டி அளித்தார் பின்னர் மந்திரி ஜக்கார்பாளையம் பிரயாணமானர். அங்கு முதியோர் கல்விபாடசாலையில் ஸ்ரீ ஏ. ஜே. எஸ் மரியதாஸ் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது ஸ்ரீ பி. எஸ். சுப்பையன் அனைவரையும் வரவேற்றப்பசினர். கனம்மந்திரி ரோச்விக்டோரியா முதியோர் கல்வியைப்பற்றி பேசிய பின்னர் பொள்ளாச்சி முசாபரி பங்களாவிற்கு வந்தடைந்தனர். அங்கு மாலை 4-மணிக்கு கனம் மந்திரியாருக்கு தாலூக்கா முதியோர் கல்விகமிட்டியின் சார்பில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பின்னர் மந்திரியார் வால்பாரைக்கு பயணமானர். சனியன்று இரவு பொள்ளாச்சிக்கு விஜயம் செய்து முதியோர் கல்விப்பாடசாலைகளை பார்வையிட்டு ஆங்காங்கு முதியோர் கல்வியின் அவசியம் குறித்து கனம் மந்திரி பேசினர். அன்னருடன் ஸ்ரீமான்கள் பி. ஆர். கந்தசாமிக்கவுண்டர், சப்கலெக்டர், போலீஸ் அதிகாரிகளும் கூடயிருந்தனர்.

20-ம் தேதி வியாழன் இரவு 7-மணியிலிருந்து 7-15 வரைக்கும் நம் நகர ஒலிபரப்பியில் இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி அ. பாசித் முதியோர் கல்விக்காக எவ்வாறுபொதுஜன ஒத்துழைப்பு பெறவது என்பதுபற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

சைக்கிள் பிடிப்பவர்கள் ஜாக்கிரதை.

நம் நகரில் முனிசிபல் சிப்பந்திகள் பாஸ் இல்லாத சைக்கிள்களையும், வண்டிகளையும் பிடிக்கிருர்கள். பிடித்தவுடன் பணம் கொடுத்து ரசிது கேட்டால்கொடுப்பதில்லை சைக்கிள்களை வைத்துக்கொள்ளுகின்றனர். முனிசிபல் ஆபீஸ் வந்துபணம்கட்டி சைக்கிள்களை பெற்றுக்கொள்ளச் சொல்லுகின்றனர். அதோடு மரியாதைக் குறைவான வார்த்தைகளைப்பேசி சைக்கிளில் வருபவர்களையும் மிகவும் இழிவுபடுத்துகின்றனர். சைக்கிள்களை தாறுமாறாக கீழே போட்டு கம்பிகள் லைட் பெல் முதலியவைகளை ஒடித்துப் போடுகின்றனர். சைக்கிள் பிடிப்பவர்களைபற்றி ஏராளமான புகார்கள் வருகின்றன. புகார்களில்லாமல் நேர்மையான ஏற்பாடுகளை உடனே கமிஷனர் செய்வாரென எதிர்பார்க்கிருேம்.

பாரதி விழா

11-ம் தேதி செவ்வாய் மாலை 7-மணிக்கு ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஷெ பள்ளி மாணவர் இலக்கிய மன்றம் தாலூக்கா முதியோர் கல்விக்கமிட்டி இவைகளின் சார்பில் நகரசபைத்தலைவர் ஸ்ரீ பி. கே. சேதுராமசாமிக் கவுண்டர் அவர்களின் தலைமையில் பாரதி விழா கொண்டாடப்பட்டது ஸ்ரீ பி எஸ் சுப்பையன் அனைவரையும் வரவேற்றப்பேசினர். மாணவர், மாணவியர் பாரதி பாடல்கள் இனிமையாகப் பாடினர். ஸ்ரீ ந. சுப்ரமணியம், பேசியபின்னர், உடுமலை தமிழ்வித்வான் ஜனப் நய்னர் முகம்மது புத்துயிர் ஊட்டியபுலவன் என்னும் பொருள்பற்றி நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினர்.

15-மாலை 6-மணிக்கு சமத்தூர் ராமய்யங்கார் முனிசிபல் உயர்நிலைப்பள்ளியின் மாணவர் இலக்கியமன்றத்தினரால்ஸ்கூல் டெப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ஐ பால்ஜேசுதாசன் அவர்கள் தலைமையில் பாரதி தினம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ எம். எஸ். ராமகிருஷ்ண அய்யர் வரவேற்புக் கூறினர். ஸ்ரீ பி. எஸ். சுப்பையன் பாரதியார் உருவப்படத்தைத்திறந்துவைத்தார் ஸ்ரீ சேதுராமசாமிக்கவுண்டர் பேசியபின்னர் பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ணவித்தியாலய தமிழ் விரியுரையாளர் ஸ்ரீ கே. என். சிவராமகிருஷ்ணன் அவர்கள் பாரதியாரைப்பற்றி சொற்பொழிவாற்றினர். பாரதிஇசைப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு நகரசபை ஆணையாளர் ஸ்ரீ ஆர். ஜெகதீசன் அவர்கள் பரிசுகள் வழங்கினர்.

16-ம் தேதி காலை 10-மணிக்கு காந்தி ஹரிஜனஹாஸ்டலில் நகரசபைத்தலைவர் ஸ்ரீ பி. கே. சேதுராமசாமிக் கவுண்டர் தலைமையில் பாரதிவிழா நடைபெற்றது. ஸ்ரீமான்கள் பி. எஸ். சுப்பையன், சி. என். நாகபபபிள்ளை யு. கே. ஷண்முக செட்டியார், சிவகுருநாத பிள்ளை மற் பலர் சொற்பொழிவாற்றினர்கள். காரி தரிசி ஸ்ரீ ஏ. கே. சுப்ரமணியம் செட் யார் வந்தனோபசாரம்கூற கூட்டம் இ துமுடிந்தது.

17-ம் தேதி வடுகபாளையம் முத்தமி வளர்ச்சிக்கழகத்தின் சார்பில் திரு. வ சு. ராமசாமிக்கவுண்டர் தலைமையில் பா திவிழா நடைபெற்றது. திருவாளர்க முருகராஜு, வெள்ளிங்கிரி, இளங்க ஆகியோர்கள்பேசினர்கள்.

மணமகள்.

23—8—51 ம் தேதி வாசியில் எ ஸ்கேயின் 50, 60 ம் பற்றி விமர்சன எழுதியிருந்தோம். இன்று மணமகள் ப ம்பற்றியும் முழுவிமர்சனம் தருகிருேம்.

எனெஸ்கே பிலிம்ஸாரின் முழுமுயற்சி டன் வெற்றிகரமாக என். எஸ். கிருஷ் னின் டைரெக்ஷனில் உருவாக்கப்பட் படம் மணமகள். இது நமதுநகரில் நாராய டாக்கீஸில் நடைபெறுகிறது. முன்ஷிபா பிள்ளையின் கதைதான் மணமகள். இதை திரைக்கதையாக மாற்றி காலத்திற்கே வகையில் எடுத்திருக்கிருர்கள். திரைக்க யமைப்பில் வெற்றி அவ்வளவாகக்கிடைக்க ல்லை. ஒளி, ஒலிப்பதிவுகள் நன்கு உள்ள காட்சி ஜோடனைகள் பிரமாதம். நடிப்பி பாலையா முதலிடம் பெறுகிருர். லலிதா ப மினி முழு முயற்சியுடன் திறம்பட நடித் ருக்கின்றனர், ஹாஸ்யம்அளவோடிருக்கிற பாட்டுகளெல்லாம் இன்பமயம். அனைவ யும் இன்பத்தில் ஆழ்த்துகிறது. வசனம் ர ராகத்தான் உள்ளது. நமக்கு வேண்டிய லாநடிகர்களுக்கும் சான்ஸ் கொடுத்திருக் ருர். என்; எஸ். கிருஷ்ணன்! மதுரம் வி வையாக நடிக்கத் திறமையிருந்தும் வசன தடுமாறச்செய்கிறது. தமிழ்மக்களுக்கு த பெருமை யளிக்கும்படி என். எஸ். கிரு ணன் டைரெக்ஷன் செய்திருக்கிருர். ம ளுக்கு அறிவூட்டும் படம்மணமகள், மக்களி பொழுதுபோக்குக்கு ஏற்றபடம் மணம அனைவரும் பார்க்கவேண்டியபடம் மணம

வெற்றிகரமாக
நடைபெறுகிறது
கோவை கர்னாடிக்கில்
7-வது வாரம்
பொள்ளாச்சி நாராயணா
டாக்கீஸில்
3-வது வாரம்
...னெஸ்கே பிலிம்ஸ்

...ணமகள்

நடிகர்கள்
கிருஷ்ணன், மதுரம்,
பாலையா, சகஸ்ரநாமம்,
டி. பாலசுப்ரமணியம்,
லலிதா — பத்மினி,
பாண்டியன்,
புளிமூட்டை ராமசாமி
டைரெக்ஷன்:
என். எஸ். கிருஷ்ணன்
கோவை நீலகிரி
ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்.

கவுண்டர் & கம்பெனி
லிமிடெட்,
கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,
டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்
விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திர வாதத்துடன் கிடைக்கும்.
Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi